<u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 58/2018 | **CNR No.** | : | TNKI13-000065-2018 |
| **Name** | : | சென்னையன் | **Father's Name** | : | கிருஷ்ணன் |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 70 | **Village** | : | ரெட்டிப்பட்டி |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 12: 35 PM | **End Time** | : | 12:53 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18.07.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

(1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் வட்டி தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. நான் வட்டிக்கு பணம் தருவதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வட்டிக்கு நான் கொடுக்கவில்லை. பிரதிவாதியை தவிர வேறு யாருக்காவது வட்டிக்கு பணம் கொடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வட்டி பேசப்பட்டதா என்றால் பிரவாதியே தான் 1 ரூபாய் வட்டி சொன்னார். வழக்கு கடனுறுதீ சீட்டில் வட்டி எதுவும் எழுதப்படவில்லையா என்றால் வட்டி எதுவும் எழுதவில்லை.

(2) வழக்கு கடனுறுதி சீட்டில் எதற்காக பணம் கொடுக்கப்பட்டது என்று எழுதி உள்ளதா என்றால் குடும்ப செலவிற்காக கேட்டார் ஆனால் அதை எழுதவில்லை. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எந்த வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேன் என்றால் இல்லை, மாங்காய், தேங்காய் விற்பனை செய்த பணம் வீட்டில் இருந்தது, அதில் இருந்து கொடுத்தேன். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு மகன்கள் அவர்கள் மணி

மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் ஆவார்கள். எனது மகன்கள் கொடுத்தல் வாங்கல் தொழில் செய்து வருகிறார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது மகன்கள் ஏதாவது நீதிமன்றத்தில் கடனுறுதி சீட்டின் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எனது மகன்களுடன் இருக்கிறேனா என்றால் இல்லை, தனி தனியாக தான் இருக்கிறோம். பிரதிவாதிக்கும் எனது மகன் மணிக்கும் தகராறு ஏற்பட்டு கல்லாவி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

(3) பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியாது. எதிர்வழக்குரை சங்கதிகள் பற்றி எனது முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் சொல்லவில்லையா என்றால் இல்லை. எனது முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும், எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தார். நான் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பி அது சார்வு செய்யப்பட்டதா என்றால் ஆமாம், அவற்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(4) பிரதிவாதி எப்போது யாரை வைத்து பணம் கேட்டார் என்றால் ஒரு 4-5 நாட்களாக என்னிடம் நேரில் வந்து கேட்டார். வழக்கு கடனுறுதி சீட்டு அச்சு தாளா வெள்ளை தாளா என்றால் வெள்ளை தாளில் அவரே எழுதி எடுத்து வந்துள்ளதாக சொல்லி கொடுத்தார். பிரதிவாதியே எழுதி கொடுத்து பணம் கேட்டாரா என்றால் ஆமாம், எழுதி எடுத்து வந்தார். நான் படித்து காண்பிக்க சொல்லி கேட்டேன், பிரதிவாதி படித்து காண்பித்தார் பிறகு வழியில் சென்ற கமல்நாதன் மற்றும் ராஜசேகர் ஆகியோரை அழைத்து சாட்சி கையொப்பங்கள் வாங்கப்பட்டது. அவர்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தார்களா என்றால் ஆமாம். அவர்கள் கையொப்பம் செய்து பிறகு என்னிடம் கொடுத்தார்களா

என்றால் ஆமாம், பிரதிவாதி ஏற்கனவே எழுதி கையொப்பம் செய்து எடுத்து கொண்டு வந்து, சாட்சிகள் என் முன்னிலையில் கையொப்பம் செய்து என்னிடம் கொடுத்தார்கள்.

(5) கடனுறுதி சீட்டை யாரை வைத்து பிரதிவாதி எழுதினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கமல்நாதன் யார் என்றால் என் ஊரை சேர்ந்தவர். கமல்நாதன் எனது தங்கையின் கணவர் என்றால் இல்லை. ராஜசேகர் யார் என்றால் அவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர், ஆனால் வேறு இனத்தை சேர்ந்தவர்.

(6) வழக்கு கடனுறுதி சீட்டை மோசடியாக தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கு சங்கதிகள் அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றும் அதற்கு எந்த கடனுறுதி சீட்டும் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கடனுறுதி சீட்டை மோடிசயாக தயாரித்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai